மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்ன சொல்ல வேண்டும்? நீங்களும் வெளியே போக வேண்டுமா?

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடரில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. தாமரைக்கனி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை பற்றி என்னுடைய அறையில் வந்து கேட்டீர்கள். இதற்குமேல் சொல்ல முடியாது என்று சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதி கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதி கிடையாது என்று சொல்லிவிட்டேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. சோ. பாலகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு கோரிக்கை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன கோரிக்கை சொல்லுங்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகளை ஏராளமான உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்களும் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார். அது என்னவென்றால் கோயம்புத்தூரில் ரயில் மறியலுக்காக...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று கடைசி நாள் என்பதால் விதிகளை மாற்ற முடியாது. சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகளை ஏராளமான உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவை 55-க்கும் மேலே இருக்கின்றன. எடுத்து விவாதிக்கப்பட்ட தீர்மானங்கள் போக, மீதமிருக்கின்ற தீர்மானங்களுக்கான பதில்கள் எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், திரு வி.கே. லட்சுமணனுக்கு என்று தனிச் சலுகை அளிக்க முடியாது.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: இன்றைக்கு என்னவென்றால், அங்கே தொழிலாளர்கள் அத்தனை பேரும் சேர்ந்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் தெரியும். எப்படி இருந்தாலும், அதற்கென்று தனியாக அனுமதி கொடுக்க முடியாது.

1999 மே 18]

திரு. சோ. பாலகிருஷ்ணன்: நீங்கள் ஒட்டுமொத்தமாக கொடுத்த statement-ஐச் சொல்லுகிறீர்கள். நான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 55-statements எல்லோருக்கும் கொடுத்தாகிவிட்டது. இனிமேல் நான் அனுமதிக்க முடியாது.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: ஏராளமான ஆலைகள் மூடப்பட்டு இருப்பதால் தொழிலாளர்கள் எல்லாம் இன்று பெரிய போராட்டங்கள் நடத்தி, இரயில் மறியல் செய்கின்ற அளவுக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் எல்லாவற்றையும் சொல்லிவிட்டீர்கள். போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அப்பாவு, நீங்கள் என்ன சொல்ல வேண்டும்? (குறுக்கீடு) திரு. பி.ஆர் சுந்தரத்திற்கு அனுமதி கிடையாது. திரு. அப்பாவு, நீங்கள் சொல்லுங்கள்.

(ச) கொடுமுடியாறு திட்டம் நிறைவேற்றுதல்

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் கிடப்பிலே கிடந்த அணைக்கட்டுகளை எல்லாம், இந்த அரசு பொறுப்பேற்றதும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?

திரு. மு. அப்பாவு: இது தென் மாவட்டத்தைச் சேர்ந்த விஷயம். நான் பேசியதும், அமைச்சரவர்கள் பதில் சொல்வார்கள் என்று கருதுகிறேன். தென் மாவட்டத்தில் கிடப்பிலே கிடந்த நம்பியாறு திட்டம், ஆலந்துரை ஆறு, பொய்கை ஆறு, பச்சை ஆறு திட்டங்களுக்கெல்லாம் புத்துயிர் கொடுத்து, அந்தப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. களக்காட்டிலே பேசும்போது இந்த மாவட்டத்தினுடைய பணிகளையெல்லாம் 3 மாதங்களுக்கு...

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. மு. அப்பாவு: 3 மாதங்களுக்கு ஒருமுறை வந்து ஆய்வு செய்து இந்தப் பணிகளைச் சிறப்பாக முடித்துத் தருகிறேன் என்றார்கள். அந்த அடிப்படையில் பணிகளும் வேகமாக நடைபெற்றுக்